**தலைப்பு 325 – இலங்கை கடலோரப் பாதுகாப்பு திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 325 – இலங்கைக் கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஓய்வூதிய திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி  கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள தாக்கங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கைக் கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 நவம்பர் 30 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 05/2023 இன் 06 பிரிவின் பிரகாரம், குறிப்பிடப்பட்டிருந்த மாதிரி திணைக்களத்தினால் காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், ஏனைய செலவின தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 12,455,733 தொகையான செலவினங்கள் மற்றும் திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட ரூபா 91,162 தொகையான கட்டு நிதி பெறுமதி செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் தனித்தனியாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சிறிய தவறு காரணமாக குறித்த பெறுமதிகள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று தனித்தனியாக காண்பிக்கப்பட்டிராததுடன், இவ்வாறான தவறுகள் எதிர்வரும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது ஏற்படாது இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

**(அ) மீண்டெழும் செலவினங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது எரிபொருளுக்காக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ரூபா 2,400,000 தொகையாக காணப்பட்டதுடன் உள்ளபடியான மொத்த செலவினம் ரூபா 532,118,353 ஆகும். அதற்கமைய மதிப்பீட்டினை விட எரிபொருள் செலவினமானது ரூபா 529,718,353 இனால் அதாவது நூற்றுக்கு 22,071 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், மதிப்பீடு போதுமானதாக இல்லாதிருந்தமையின் அடிப்படையில் மேலதிக எரிபொருள் மீளளிப்பு செய்யப்படாது கடற்படையிடமிருந்து எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அந்த செலவினம் திணைக்களத்தின் செலவினக் கூற்றில் அல்லது கட்டுநிதி இணக்க கூற்றில் செலவினமொன்றாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த திணைக்களத்திற்கு தேவையான எரிபொருள் பின்னர் மீளளிப்பு செய்யப்படும் அடிப்படையில் இலங்கை கடற்படையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திடமிருந்து எரிபொருளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு தொடர்ச்சியாக போதுமானதாக இல்லாத அந்த எரிபொருள் பெறுமதி கடற்படைக்கு மீளழிப்பு செய்ய முடியாதுள்ளது. 2023 ஆம் ஆண்டுக்காக இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் எரிபொருள் தேவைப்பாட்டினை மீளளிப்பு செய்யாது கடற்படையிடமிருந்து பெற்று கொள்வதற்கு தேவையான அங்கீகாரம் 2022 அக்டோபர் 12 திகதிய ஆம் MOD/FIN/06/02/05/(15) இலக்க கடிதத்தின் மூலம் பாதுகாப்புச் செயலாளரினால் வழங்கப்பட்டுள்ளது. அந்த அதிகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன், வாகனங்கள் மற்றும் இயந்திரங்களுக்கு தேவையான உராய்வு நீக்கி எண்ணெயின் | செலவீனங்களை உரிய முறையில் எதிர்வுகூறி செலவின விடயத்திற்கு தேவையான நிதியேற்பாட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | தேவைபாட்டுக்காக மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டினை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ii) | திணைக்களத்தின் கடமைகளில் மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் மற்றும் கடற்படையினருக்கு இலங்கை கடற்படையின் செலவின தலைப்பின் கீழ் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அந்த செலவினம் திணைக்களத்தின் செலவின கூற்றில் அல்லது கட்டு நிதி இணக்க கூற்றில் செலவினம் ஒன்றாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த திணைக்களத்திற்கு சொந்தமான பதவியணி இரட்டை அடிப்படையில் இலங்கை கடற்படையிடமிருந்து இணைப்புச் செய்யப்பட்டுள்ளமையால் அவர்களுக்கு இந்த திணைக்களத்தின் ஆரம்பம் முதல் இது வரையிலும் இலங்கை கடற்படையிலிருந்து சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டுள்ளன. மேலும், எதிர்வரும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கரையோர பாதுகாப்பு நபர்களின் சம்பளம் மற்றும் படிகளை திணைக்களத்தின் செலவினக் கூற்றிற்கு / கட்டுநிதி இணக்க கூற்றில் செலவினமொன்றாக உள்ளடக்குவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது என்பது. | செலவினங்கள் உரிய முறையில் எதிர்வு கூறப்பட்டு செலவின விடயத்திற்கு தேவையான நிதியேற்பாட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 250,000,000 தொகையான தேறிய நிதியேற்பாட்டினை கொண்ட இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் செலவின விடயத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான | வள்ளங்களின் பராமரிப்புக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய வெளிநாட்டு கொள்வனவுகளுக்கு காணப்படும் வரையறைகள் | நிதியேற்பாடுகள் உச்ச செயர்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேமிப்பானது ரூபா 78,715,023 ஆக காணப்பட்டதுடன், அது தேறிய நிதியேற்பாட்டின் 32 சதவீதம் ஆகும். வள்ளங்களின் பராமரிப்பு பணிகளை திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளாமை, பிரதான தன்மையிலான கொல்வனவுகள் இடம் பெறாமை ஆகியன இந்த சேமிப்புக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன. | (உதாரணம் வெளிநாட்டு பணம் பற்றாக்குறை காரணமாக LC மற்றும் TT ஆகியவை திறக்கப்படாமை), செலவீனங்களை கட்டுப்படுத்தும் நோக்கில் கப்பலில் செய்யும் பயணங்களில் மணித்தியாலங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை, வழங்குனர்கள் உரிய முறையில் கப்பல்களின் உதிரிப்பாகங்களை விநியோகிப்பதற்கு தவறியமை போன்ற காரணங்களின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டு களுக்காக கப்பல்களின் பராமரிப்பு பணிகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு தவறிய காரணத்தால் வருடாந்த சேமிப்பின் பெறுமதியானது அதிகரித்துள்ளது. | |
| (ஆ) | உத்தேசிக்கப்பட்ட இரு கட்டிடங்களை புதிதாக நிர்மாணிகும் செயற்திட்டத்திற்காக ரூபா 82,700,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், குறித்த நிர்மாண பணிகள் கைவிடப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வண்டின் இறுதி திகதியில் உள்ள படியாக கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் செலவின விடயத்தின் சேமிப்புகள் ரூபா 68,989,858 ஆக காணப்பட்டதுடன் அது தேறிய நிதியேற்பாட்டின் 83 சதவீதம் ஆகும். | கட்டுமானம் இடம்பெறும் காணியின் உரித்து தொடர்பில் நிலவும் சிக்கலான நிலைமை காரணமாக இலங்கை கரையோர பாதுகாப்பு வருண நிறுவனத்தின் நிர்மாணத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத்தில் கட்டுமான பணிகளை ஆரம்பிக்க முடியாது உள்ளமையால் ரூபா 38 மில்லியன் நிதியேற்பாட்டில் அந்த கட்டிடத்தில் நிர்வாணங்களுக்காக ரூபா 13,710,142 பெறுமதியான கட்டிடப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இலங்கை கரையோர | நிதியேற்பாடுகள் உச்ச செயற்திறனுடன் பயன்படுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பாதுகாப்பு ரோகண நிறுவனத்தின் உத்தேச ஐந்து மாடி கட்டிடமும் அமைச்சின் வாய்மொழி மூல அறிவுரையின் அடிப்படையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 51 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த சேமிப்புகளில் பயிற்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 6,300,000 தொகையான நிதியேற்பாடு மாற்றப்பட்டதன் பின்னர் மொத்த சேமிப்புகள் ரூபா 68,989,858 ஆக காண்பிக்கப்படுகிறது. | |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணக்கமின்மை** | | |
| நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | - | நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் செயல் நிமித்த உப கட்டநிதியை பெற்றுக் கொள்ளும் பதவி நிலை உத்தியோகத்தரால் அந்த பணி நிறைவடைந்த உடன் உடனடியாக அந்த கட்டுநிதி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய | செயல் நிமித்த உப கட்டு நிதிகளை பெற்றுக்கொண்டு கப்பல்கள் மற்றும் நிறுவனத்தினால் பல்வேறு தவிர்க்க முடியாத நிர்வாக நீதியான காரணங்களால் அதற்குரிய பற்றுச்சீட்டுக்கள் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தால் உப கட்டுநிதிகளை தீர்ப்பதற்கு தாமதம் ஏற்பட்டுள்ள போதிலும் எதிர்காலத்தில் உரிய காலப்பகுதியினுள் உப கட்டுநிதிகளை தீர்ப்பதற்கு குறித்து | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

| | |
|---|---|
| போதிலும், மீளாய்வாண்டின் 05 கட்டு நிதிகளுக்கு உரியதாக கட்டுநிதி மீதி தீர்ப்பனவிற்கு உரிய பணி நிறைவடைந்த பின்னர் 11 நாட்கள் முதல் 115 நாட்கள் வரையிலான காலதாமதம் இடம் பெற்றிருந்தது. | வைத்துக் கொள்ளப்பட்டது. மேலும் இது தொடர்பில் கப்பல்கள் மற்றும் நிறுவனத்திடம் இருந்து எழுத்து மூலம் அறிவித்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்கு மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கு உரியதாக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் நிதி இலக்குகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் பௌதிக இலக்குகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டமானது பாதுகாப்பு அமைச்சினாலேயே வழங்கப்படும் மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்படுவது உடன், 2025 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கை திட்டத்தினை தயாரிக்கும் போது கணக்காய்வில் சுட்டி காண்பிக்கப்பட்டுள்ள “திணைக்களத்தின் ஆண்டினுள் எதிர்பார்க்கப்படும் பௌதீக இலக்குகள் காணப்பட்டால்’’ பாதுகாப்பு அமைச்சுடன் உரிய முறையில் தொடர்பு கொண்டு உரிய முறையில் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்கின்றேன். | செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது அடையப்பட வேண்டிய இலக்குகளை உரிய முறையில் எதிர்ப்பு கூறப்பட வேண்டும். |

### 3.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) **மீன்பிடி வள்ளங்களை கண்காணிப்பதற்கு தொழில்நுட்ப கட்டமைப்பினை பயன்படுத்துதல்** | | |
| மீன் பிடி வளங்கள் காணப்படும் இடங்கள் மற்றும் அவற்றின் பயண வழித்தடங்களை அவதானிக்க கூடிய VMS கட்டமைப்பு திணைக்களத்திடம் காணப்படாதத்துடன், சந்தேகத்திற்கு உரிய வள்ளங்கள் தொடர்பில் கடற்படையின் உதவியின் அடிப்படையில் கிடைக்கும் தகவல்களை பயன்படுத்தி அந்த வள்ளங்களை பரீட்சித்தல் இடம்பெறுவதாக அவதானிக்கப்பட்டது. உள்ளங்களின் கண்காணிப்புக்காக VMS கட்டமைப்பினை பயன்படுத்துவதற்கு உரிய சட்ட அதிகாரத்தினை திணைக்களத்திற்கும் பெற்றுக்கொண்டு அதன் மூலம் திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பங்களிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீன்பிடி வள்ளங்களை திட்டவட்டமான இடங்களின் கண்காணித்தல் VMS கட்டமைப்பினை கரையோர பாதுகாப்புத் திணைக்களத்துக்கு சொந்தமாக காணப்படாததுடன், அது தொடர்பில் செயப்படுவதற்கு சட்ட அதிகாரம் கரையோர பாதுகாப்புத் திணைக்களத்திற்கு அல்லது கடற்படைக்கு இல்லாதிருந்தத்துடன் அது தொடர்பில் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் தொழிற்படுகின்றது. | வள்ளங்களை கண்காணிப்பதற்காக VMS கட்டமைப்பினை பயன்படுத்துவதற்கு சட்ட ஏற்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஆ) (i) கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் திணைக்களத்துடன் இணைந்து மீன்பிடி வள்ளங்களை கண்காணிக்கும் Blue Tracker AIS கட்டமைப்புடன் தொடர்புபட்டு மீன்பிடி வளங்களை பரிசோதிக்கும் தொழில்நுட்ப வசதிகளை பெற்றுக்கொண்டிருக்கவில்லை | மீன்பிடி மற்றும் நீரியல் வள மூலங்கள் திணைக்களத்திடமிருந்து 2023 நவம்பர் மாதம் 20 திகதி Blue Tracker AIS கட்டமைப்பு இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்களத்திற்கு பெற்றுத் தருமாறு கோரப்பட்டுள்ளதுடன் அதனை பெற்றுக் கொள்வதற்கு உரிய | தொழில்நுட்ப வசதிகளை பெற்றுக்கொள்ளல் தொடர்பில் பின் தொடர்தல் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | ல. | நடவடிக்கைகள் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | இலங்கையின் கரையோரத்தில் காணப்படும் பல நாள் மீன்பிடி வள்ளங்கள் மற்றும் ஒரு நாள் மீன்பிடி வள்ளல்கள் திணைக்களத்தினால் உரிய மீன்பிடி வள்ளங்களுக்கு உரிய பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த வளங்களுக்கு உரிய தகவல்களை உள்ளடக்கி மத்தியப்படுத்தப்பட்ட தரவு கட்டமைப்பு ஒன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் பிராந்திய பனிப்பாளர்களால் மீன்பிடி வள்ளங்களின் தகவல்களை உள்ளடக்குவதற்காக மீன்பிடி அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளதுடன், மத்தியப்படுத்தப்பட்ட தரவு கட்டமைப்பொன்றினை உருவாக்குவதற்கு நிதி ஏற்பாடு காணப்படவில்லை. இவ்வாறான போதிலும் நிறுவனத்தின் பணியில் ஈடுபட்டுள்ள விசேட அறிவுடைய நபர்களின் அறிவின் அடிப்படையில் அனைத்து தரவுகளும் ஒரே இடத்தில் தரவு கட்டமைப்பில் சேகரிக்க முயற்சி எடுக்கப்பட்டவாறு உள்ளது. | மத்தியப்படுத்தப்பட்ட தரவு கட்டமைப்பொன்றினை தயாரிக்க வேண்டும் என்பது. |

## 3.3 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்படாது கைவிடப்படல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| வெள்ளவத்தையில் அமைந்துள்ள கரையோர பாதுகாப்பு வருண நிறுவனத்திற்காக விடுதி மற்றும் நிர்வாக வசதிகளுடனான புதிய நான்கு மாடி கட்டிடம் ஒன்றினை நிர்மாணிக்கும் முதலாம் கட்டத்திற்காக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 40,000,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாடுகளில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 4,728,914 தொகை மற்றும் 2023 ஆம் ஆண்டில் ரூபா 13,052,119 தொகை எனுமாறு ரூபா 17,781,033 கூட்டு பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு வெள்ளவத்த பிராந்திய நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த போதிலும் காணியின் உரித்து | இந்த மூலப் பொருட்கள் பாதுகாப்பாகவும் முறையாகவும் இலங்கை கரையோர பாதுகாப்பு அருண நிறுவனத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள துடன், காணப்படும் பலகையின் வகை (ப்ளைவுட் மற்றும் II ஆம் வகுப்பிலான பலகைகள்) நுண்ணுயிரிகள் மற்றும் கடலோரத்தில் காணப்படுகிற காரணத்தால் ஏற்படும் சூழல் நிலைமைகளின் அடிப்படையில் | கட்டுமான பொருட்களின் பாதுகாப்பு மற்றும் பயன்பாடு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொடர்பிலான சிக்கலின் அடிப்படையில் நிர்மாணம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட மூலப் பொருட்கள் பூச்சிகள் மற்றும் கரையோரத்தில் காணப்பட்ட காரணத்தால் சேதமடைந்த நிலைக்கு உள்ளாகும் அச்சுறுத்தல் நிலவியது. | சேதமடையும் அச்சுறுத்தல் காணப்படுகிறது. இந்த செயல்திட்டத்திற்கு உரியதாக 2022 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட பலகை தற்போது அழிவடையும் அபாயத்திற்கு உள்ளாகியுள்ளது. இதன் மூலம் இந்த செயல் திட்டத்திற்கு உரிய மூலப்பொருட்களை மற்றும் ஒரு செயல் திட்டத்திற்கு ஈடுபடுத்துவதற்கு அல்லது பொருத்தமான பணியில் ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் 07 அலகுகளின் அரசின் ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களத்திற்கு சொந்தமான பல்வேறு இடங்களில் அமைந்துள்ள 478.09 பேச்சஸ் பரப்பளவான காணியில் நடத்திச் செல்லப்படுவதுடன் அந்த காணிகளை திணைக்களத்திற்கு கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்குளத்திற்கு சொந்தமான அலகுகளை நடாத்தி செல்வதற்காக திணைக்களத்துக்கு உரித்தான காணிகள் பயன்படுத்தப்படுவதுடன் அந்த காணிகளை உரித்துடைய தரப்பினரின் காணிகளில் இருந்து அதன் உரித்தினை இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்களத்திற்கு கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | காணிகளை கையகப்படுத்தும் பணிகளை துரிதமாக நிறைவு செய்ய வேண்டியமை. |
| (ஆ) திணைக்களத்தின் வருண நிறுவனத்திற்கு சொந்தமான கல்கிச உயிர் காப்பு கண்காணிப்பு குடில் அமைந்துள்ள 17.9 பேர்ச்சஸ் பரப்பளவான காணிக்கு உரிய குத்தகை உடன்படிக்கை 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி நிறைவடைந்திருந்த போதிலும் | கல்கிசை உயிர் காப்பு கண்காணிப்பு குடில் அமைந்துள்ள காணியின் குத்தகைய உடன்படிக்கையை நாளதுவரையாக்கும் போது அந்த காணியின் உரிமையாளர் வெளிநாடு | குத்தகை உடன்படிக்கையை நாளதுவரையாக்கி சட்ட உரித்தினை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதனை புதுப்பிப்பதற்கு 2023 திசெம்பர் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சென்றுள்ள காரணத்தால் நாளதுவரையாக்கும் பணிகள் தாமதம் அடைந்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | இலங்கையை சுற்றி அமைந்துள்ள 148,721 கடல் மைல்களை மேவுகை செய்வதற்கு திணைக்களத்திற்கு சொந்தமான 04 கப்பல்கள் மற்றும் 27 வள்ளங்களைக் கொண்ட குழாம் ஒன்று காணப்பபடுவதுடன், அவற்றுள் 2023 ஆம் ஆண்டில் செயல்பாட்டு நிலைமையில் காணப்பட்ட கப்பல்கள் மற்றும் வள்ளங்களின் எண்ணிக்கை 22 ஆகும். செயலிழந்த நிலையில் காணப்படும் 09 கப்பல்கள் மற்றும் 06 வள்ளங்களை பழுது பார்ப்பதற்கு நிதியேற்பாடு காணப்படாத அடிப்படையில் கூறப்பட்ட உதிரி பாகங்கள் கிடைக்காதிருந்தமையின் அடிப்படையிலும் மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்த முடியாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த வள்ளங்களை பழுதுபார்ப்பதற்காக நிதியேற்பாடு இல்லாதிருந்தமை, உதிரி பாகங்கள் கோரப்பட்டுள்ளமை, செயற்படு நிலைமைக்கு உள்ளாவதற்கு அருகாமையில் காணப்படுகின்றமை பழுது பார்த்தல் செலவினம் அதிகரித்துள்ளமையால் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளமை போன்ற காரணங்கள் தாக்கமளித்துள்ளன. | வள்ளங்களை செயற்படு நிலமைக்கு உள்ளாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் செயல்பாட்டு நிலைமையில் உள்ள வள்ளங்களை உரிய முறையில் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

**3.5 முகாமைத்துவ நலிவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டினில் கரையோர பாதுகாப்பு விடயத்திற்கு உரியதாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகளை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் மற்றும் 13 கடற்படையினருக்கு உரிய பயிற்சி பாடநெறிகளை நிறைவு செய்த பின்னர் ஒரு மாதத்திற்கு குறைவான காலப்பகுதியில் இருந்து 09 மாத காலப்பகுதியினுள் மீண்டும் கடற்படைக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்தமையால் அந்த | பாடநெறிகளை பின்பற்றும் கரையோர பாதுகாப்பு நபர்கள் பாடநெறிகள் நிறைவடைந்த பின்னர் எதிர்வரும் இரண்டு வருடத்திற்கு அண்மைய காலம் கரையோரப் பாதுகாப்பு கடமைகளுக்காக தடுத்து வைத்தல் இடம்பெறுகிறது. விடயம் அவ்வாறு உள்ளபோது தவிர்க்க முடியாத காரணங்களால் அவர்களுக்கு கடற்படைக்கு | பயிற்சிப்பாட நெறிகளுக்கு உரிய உடன்படிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவை. |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்கள் மற்றும் கடற்படையினரிடமிருந்து திணைக்களத்திற்கு பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த சேவை குறைவடைந்து இருந்தது. அவ்வாறே வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகளில் அந்த பயிற்சி பாடநெறிகளின் பிணைமுறிகளில் குறிப்பிடப்பட்டிருந்த ஆகக் குறைந்த காலப்பகுதியினை நிறைவு செய்வதற்கு முன்னர் திணைக்களத்தின் சேவையிலிருந்து விலகிச் செல்வதற்கு நேர்ந்திருந்த சந்தர்ப்பங்களும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. | இடமாற்றம் பெற்று செல்லும் சில சந்தர்ப்பங்களில் நேர்ந்துள்ளது. | |
| (ஆ) | கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரச் சட்டத்தை இரத்துச் செய்து புதிய சட்டம் ஒன்றினை உருவாக்குவதற்கு 2016 ஆம் ஆண்டில் அமைச்சரவியின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் புதிய அதிகாரச் சட்டத்தினை உருவாக்குவதற்கு தவறி இருந்தது. | கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகார சட்டத்தினை இரத்துச்செய்து புதிய அதிகாரச்சட்டம் ஒன்றினை தயாரிப்பதற்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தினை உருவாக்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சீருடைகளை வழங்கும் போது திணைக்களத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும் கணினி கட்டமைப்பில் நிலவிய கோளாறு அடிப்படையில் இருப்பினை நாளதுவரையாக்குவதில் குறைபாடுகள் நிலவிய போதிலும் அந்த கணினி கட்டமைப்பினை முறைமைப் படுத்துவதற்கு உரிய பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணினிக் கட்டமைப்பினை உரிய முறையில் கிரமமாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்வதற்கு தகவல் தொழில்நுட்ப திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அது இலங்கை கடற்படையில் நிலவும் நடைமுறைக்கமைய தயாரிப்பதற்காக 2024 ஏப்ரல் மாதம் ஒன்பதாம் திகதி கடிதத்தின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது அதற்கு உரிய நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டவாறு | கணினி கட்டமைப்பினை நாளதுவரை ஆக்கி பேணி செல்ல வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| | உள்ளது. | |
| (ஈ) திணைக்களத்தின் மேற்கு பிராந்தியத்தின் புதிய நிலையம் அமைந்துள்ள 132.64 பேர்சஸ் பரப்பளவான வெள்ளவத்த காணி பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டு செயற்திட்டத்திற்காக கொழும்பு மாநகர சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு காணப்பட்ட போதிலும் இந்த பிராந்திய மத்திய நிலையத்தினை நிறுவுவதற்கு பொருத்தமான காணி ஒன்றினை கண்டறிவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.. | கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் மேற்கு பிராந்திய வெள்ளவத்தையில் அமைந்துள்ள காணியிலிருந்து அகற்றிக் கொள்வதற்கு நேர்ந்தால் அதற்காக வெள்ளவத்த பிரதேசத்தில் அல்லது அதனை அண்மைய இடம் ஒன்றில் பொருத்தமான காணி ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | பொருத்தமான காணி ஒன்று பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| இலங்கையை சுற்றிலும் அமைந்துள்ள கடற்கரையின் திணைக்களத்தின் கடமை தேவைப்பாட்டுக்களின் அடிப்படையில் நான்கு வலயங்களாக பகிர்ந்து உள்ளதுடன், அந்த நான்கு வலயங்களுக்கும் 573 பதவியணி மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளபடியாக இணைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் 106 எண்ணிக்கையான பதவியணி தேவைப்பாடு உள்ளமை இனங்காணப்பட்டிருந்தது. அந்த ஒவ்வொரு வலயங்களுக்காகவும் இணைப்பு செய்யப்பட வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திட்டவட்டமாக இனங்காணாத காரணத்தால் பதவியணி மிகை அல்லது பற்றாக்குறை காணப்படுகிறதா என்பதை திட்டவட்டமாக வெளியிட முடியாதுள்ளது. | ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் கடமை ரீதியான பற்றாக்குறை காணப்படும் கடலோரப் பாதுகாப்பு நபர்களின் எண்ணிக்கை பின்வருமாறு காணப்படுவதுடன், அந்த நபர்களை இணைப்புச் செய்வதற்கு கடற்படையுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது.<br><br>(1) பிராந்திய தெற்கு அதிகாரப் பிரதேசம் - 38<br><br>(2) பிராந்திய மேற்கு அதிகார பிரதேசம் - 39<br><br>(3) பிராந்திய கிழக்கு | ஒவ்வொரு வலயத்திற்காகவும் போதுமான பதவியணியை அங்கீகரிப்பதற்கும் இணைப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அதிகார பிரதேசம் - 23

(4) பிராந்திய வடக்கு அதிகார பிரதேசம் - 25

மேலும், கடலோரப் பாதுகாப்பு கப்பல்கள் / வள்ளங்கள் வடக்கு, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு ஆகிய நான்கு பிரதேசங்களில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், செயற்பாட்டு தேவைப்பாடுகள், சேவைகள் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக அந்த வள்ளங்கள் பிராந்தியங்களுக்கு இடையே பரிமாற்றப்படுகின்றதுடன், ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் உரிய நபர்களின் நிலையான எண்ணிக்கையை பேண முடியாது.